உ


சிவமயம்

ரிஷிவந்தியம்

ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேவஸ்தான

# சிறப்பு நூல்.

ஸ்ரீ அர்த்தனரீஸ்வரர் ரிஷிவந்தியம்.



சுபகிருது ஆண்டு ஆனித்திங்கள் பிரம்மோற்சவ கால

வஸ்தான வெளியீடு.

இஃ


ஸ்ரீ தங்க

பதிப்பிக்க


1962

GF
Q23:38Ris
K2

மகாமகோபாத்யாய,
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
பெயர். ரிஷிவந்தியம் ஸ்ரீ அர்த்த
நாரீஸ்வரர் தேவஸ்தான சிறப்பு
நூல்
தொடர் எண் 3439
VIII. D. 236



[ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் கோவில் - சிவகண கோபுர வாயில்.]



ஆண்டுதோறும் பிரம்மோற்சவ காலங்களில் **ரத உற்சவத்தன்று**
ரதத்திற்குக் கோயிலிலிருந்து சுவாமி எழுந்தருளும்போது
**கோபுர வாயில் முன்மண்டபத்தில்** ரிஷிவந்தியம்
ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட் மானேஜிங்-
டைரக்டர் ஸ்ரீ R. P. **கந்தசாமி** அவர்களால் நடத்திவரும்
**முதல் மண்டகப்படி விசேஷ ஆராதனைக் காக்ஷி.**

உ

சிவமயம்

# ரிஷிவந்தியம்
# ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேவஸ்தான
# சிறப்பு நூல்.

★

சுபகிருது ஆண்டு ஆனித்திங்கள் பிரம்மோற்சவ கால

தேவஸ்தான வெளியீடு.

இஃது

ரிஷிவந்தியம் ஸ்ரீ தங்கம் பவர் அச்சகத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1962

[ விலை 0-50 புதுக்காசு.

# ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேவஸ்தானம்

# ரிஷிவந்தியம்.

கனம் M. பக்தவத்சலம் M. A. B. L., அவர்கள்
தமிழக அறநிலைய பாதுகாப்பு அமைச்சர், சென்னை.

உயர்திரு K. சாரங்கபாணி முதலியார் B.A.B.L., அவர்கள்
தமிழக அறநிலைய பாதுகாப்பு ஆணையாளர், சென்னை.

உயர்திரு D. இராமலிங்க ரெட்டியார் M.A., B.L., அவர்கள்
தமிழக அறநிலைய பாதுகாப்பு உதவி ஆணையாளர், சென்னை.

உயர்திரு A. V. நாகராஜன் அவர்கள்
தென்னாற்காடு மாவட்ட அறநிலைய பாதுகாப்பு
துணை ஆணையாளர், கடலூர்.

உயர்திரு R. ராமச்சந்திரன் அவர்கள்
வட்ட அறநிலைய ஆய்வாளர் விருத்தாசலம்.

திரு. டாக்டர் R. P. கந்தசாமி
மானேஜிங்-டைரக்டர்,
ஸ்ரீ முருகன் டுடோரியல்ஸ்; H. O :- ரிஷிவந்தியம்
நிர்வாக தர்மகர்த்தா.

திரு K. குப்புசாமி,
நிழக்கிழார், ரிஷிவந்தியம்,
தர்மகர்த்தா.



கனம். M. பக்தவத்ஸலம்.

அறநிலைய பாதுகாப்பு அமைச்சர், தமிழ்நாடு.

# ரிஷிவந்தியம் தேவஸ்தானத்தில் நடக்கும்
# விசேஷ உற்சவங்கள்.

சித்திரை மாதம் — சித்திரா பௌர்ணமி **வசந்த உற்சவம்**
உபயதாரர் :- திரு T. சாம்பசிவம் பிள்ளை, கர்ணம், ரிஷிவந்தியம்.

வைகாசி மாதம் — அக்னி நட்சத்திர உற்சவமும் - சீதள கும்பமும்
உபயதாரர் :- Dr. R. P. கந்தசாமி, "ஸ்ரீ கந்த விலாஸ்" ரிஷிவந்தியம்.

ஆனி மாதம் — **பிரம்மோற்சவம்.**

1. விக்னேஸ்வரர் பூஜை — ஸ்ரீ பெரியசாமி மூப்பர் & வேட மூப்பர், ரிஷிவந்தியம்
2. தவஜாரோஹணம் —நாட்டாண்மை ஸ்ரீ கட்டபால மூப்பர் வகையராக்கள், ரிஷிவந்தியம்.
3. இரண்டாம் திருவிழா - ஆர்ய வைஸ்யாள் வகையராக்கள், நாட்டாண்மை - S. நாராயணசாமி செட்டியார், ரிஷிவந்தியம்.
4. மூன்றும் திருவிழா — விஸ்வகர்மாக்கள் வகையரா, ஸ்ரீ ஆதிவராஹ ஆச்சாரி, ரிஷிவந்தியம்.
5. நான்காம் திருவிழா — தொண்டைமண்டல வேளாளர்கள், நாட்டாண்மை ஸ்ரீ வெங்கிடாசல முதலியார் வகையராக்கள், ரிஷிவந்தியம்.
6. ஐந்தாம் திருவிழா (ஐந்தாம்கால் நாட்டுதல்) — 1) திரு P. A. நடேச அய்யர், மணியம், பாசார்.
   2) திரு. ராமலிங்கம் பிள்ளை, மணியம், முனிவாழை,
7. ஆறும் திருவிழா — கம்பத்தம் திரு. தங்கவேலு வாண்டையார், முடியனூர்.
8. ஏழாம் திருவிழா (**திருக்கல்யாணம்**) — பழங்கூர் பத்து கருணீகர் வகையராக்கள் : திரு. அப்பு பிள்ளை, கர்ணம், லா. கூடலூர்.
9. எட்டாம் திருவிழா— (**பாரி வேட்டை**) கம்பத்தம் திரு. தண்டபாணி முதலியார், பூண்டி.

10. a) உச்சிகால அபிஷேக ஆராதனை:- திரு விந்தைவேலன் ஆசிரியர் & நிலக்கிழார், ரிஷிவந்தியம்.

b) சுவாமி ரதத்திற்கு எழுந்தருளல் :- விசேஷ ஆராதனை - பெரியபால மூப்பர், சின்னபால மூப்பர் வகையராக்கள், ரிஷிவந்தியம்.

c) முதல் மண்டகப்படி விசேஷ ஆராதனைகள் :- டாக்டர் ஸ்ரீ R. P. கந்தசாமி, மானேஜிங்-டைரக்டர், ஸ்ரீ முருகன் டுடோரியல்ஸ், ரிஷிவந்தியம்.

d) ரத ஊர்வலம் :- தேவஸ்தானம்.

e) ரதமண்டபத்தில் விசேஷ ஆராதனை :- திரு. R. V. R. கன்னைய நாயுடு, ரைஸ் மில்ஸ், ரிஷிவந்தியம்.

11. a) தேர்க்கால் பார்க்கும் உற்சவம் :- தேவஸ்தானம்.

b) தீர்த்தவாரி :- திரு. T. கோவிந்தசாமி கோனார், நிலக்கிழார், ரிஷிவந்தியம்.

c) அவரோஹணம் :- நத்தமன்னர் வகையராக்கள், மண்டகப்பாடி.

12. a) சண்டிகேஸ்வரர் உற்சவம் :- திரு. R. A. S. மணி அய்யர், புரோகிதம், ரிஷிவந்தியம்.

b) விடையாற்றி உற்சவம் :- திரு. R. தங்கராஜு முதலியார், நாட்டாண்மை, ரிஷிவந்தியம்.

ஆடி மாதம் — பதினெட்டாம்பெருக்கு உற்சவம்
உபயதாரர் :- தேவஸ்தான சிப்பந்திகள்.

ஆவணி மாதம் — விநாயகர் சதுர்த்தி
உபயதாரர் :- ஸ்ரீ M. கந்தசாமி மூப்பர், ரிஷிவந்தியம்.

புரட்டாசி மாதம் - **நவராத்திரி** பத்துநாள் உற்சவங்கள்
உபயதாரர்களால் நடத்தப்படும்.

ஐப்பசி மாதம் — தீபாவளிப் பண்டிகை விழா
உபயதாரர்:- திரு. வேலாயுத உடையார் நாட்டாண்மை, முட்டியம்.

,, **சூரசம்ஹாரம் & திருக்கல்யாண உற்சவம்**
செங்குந்த முதலியார் வகையராக்கள்,
நாட்டாண்மை திரு. R. தங்கராஜு முதலியார், ரிஷிவந்தியம்.

,, **அன்னாபிஷேகம்**
உபயதாரர் :- ஸ்ரீமதி அலமேலம்மையார், குன்னியூர்.

கார்த்திகை மாதம் :—

முதல் சோமவாரம் — வாணிய செட்டியார் வகையருக்கள் ரிஷிவந்தியம்.

இரண்டாவது சோமவாரம் — திரு. குப்புசாமி உடையார், முட்டியம்.

மூன்றாவது சோமவாரம் — ஸ்ரீ தண்டபாணிகுருக்கள், ரிஷிவந்தியம்.

நான்காவது சோமவாரம் — தொண்டைமண்டல வேளாள வகையருக்கள், ரிஷிவந்தியம்.

**பரணி & கார்த்திகை தீபம் :-** ,, ,

**சுக்கிலபக்ஷ பிரதோஷம் :-** தொண்டைமண்டல வேளாள வகையருக்கள், கொட்டையூர்.

மார்கழி மாதம் — தனுர்மாத பூஜை (1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை) உஷக்கால பூஜை, தேவாரம், திருப்புகழ், பஜனை — தேவஸ்தானம்.

,, — **ஆருத்ரா தரிசனம்**

உபயதாரர் :- திரு. முத்துசாமி செட்டியார் வகையரு, மண்டகப்படி.

தை மாதம்-**பொங்கல் விழா**-திரு. வேடமூப்பர், ரிஷிவந்தியம்.

**மாட்டுப்பொங்கல்**—திரு. வரதராஜ செட்டியார், ரிஷிவந்தியம்.

**தைப்பூசம்**—கோதண்டராஜு செட்டியார் ,,

**ஆற்றுத் திருவிழா**—தேவஸ்தானம்.

ஆற்றிற்குப் போகும்போது தொரசலூர் மண்டகப்படி.
ஆற்றில் செல்லூர் திரு. நா. நாராயணசாமி நாய்க்கர்
"திருமஞ்சனம்" இரவு :- தியாகதுருகம்-மண்டகப்படி.

மாசி மாதம் — **மாசி மகம்** :- ஆர்ய வைஸ்ய வகையருக்கள், ரிஷிவந்தியம்.

பங்குனி மாதம் — **திருக்கல்யாணம்**

சைவ வேளாளர் வகையருக்கள், வெங்கலம்.

குறிப்பு :- 1) ஸ்ரீ முருகப்பெருமானுக்கு பிரதிமாதக் கிருத்திகை அபிஷேக ஆராதனைகள் உபயதாரர்களால் சிறப்புற நடந்து வருகிறது.

2) மாதந்தோறும் **பிரதோஷக்** கட்டளைகள் சிறப்புற நடந்துவருகிறது.

உபயதாரர் :- டாக்டர் ஸ்ரீ R. P. கந்தசாமி,
ஸ்ரீ முருகன் டுடோரியல்ஸ் மானேஜிங்-டைரக்டர்,
ரிஷிவந்தியம்.

3) கார்த்திகை மாதம் 30-நாளும் கோபுரத்தில் **தீபம்** வைக்கும் கட்டளை

உபயதாரர் :- ஸ்ரீ வெங்கிடசல மூப்பர் வகையருக்கள், ரிஷிவந்தியம்.

# தேவஸ்தான தினசரி பூஜை விபரம்.

காலை 8-30-மணிக்கு காலை சந்தி அபிஷேக நைவேத்திய ஆராதனை.
,, 10-00-மணிக்கு உச்சிகால பூஜை.
மாலை 6-30-மணிக்கு சாயரட்சை பூஜை.
இரவு 8-30-மணிக்கு அர்த்தஜாம பூஜை.

குறிப்பு:—மேற்கண்ட நாலுகால பூஜைகளும் கோவில் மேளத்துடன் சிறப்புற நடந்து வருகிறது.

---

## அர்ச்சனை கட்டண விபரம்:-

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பஞ்சமூர்த்தி | அர்ச்சனை | ஆராதனை— | கட்டணம் | ரூ. 1—31 |
| 2. | மும்மூர்த்தி | ,, | ,, | ,, | ரூ. 0—78 |
| 3. | ஒரு மூர்த்தி | ,, | ,, | ,, | ரூ. 0–28 |

## திருமணக் கட்டண விபரம்:-

தேவஸ்தானத்தில் திருமணம்செய்துகொள்ள செலுத்தவேண்டிய கட்டணம் ரூ. 9—00

குறிப்பு:—அர்ச்சனை, திருமணம், இவைகளுக்குத் தேவஸ்தான ஆபீசில் கட்டணதொகை செலுத்தி அச்சிட்ட ரசீது பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

### தேவஸ்தான சிப்பந்திகள்:-

1. ஸ்ரீ V. சுந்தரேசகுருக்கள் —அர்ச்சகர்.
2. ஸ்ரீ S. அர்த்தனாரிகுருக்கள்—பரிச்சாரகர்.
3. ஸ்ரீ G. கிருஷ்ணமாச்சாரி— மணியம்.
4. ஸ்ரீ R. K. மிளகு—ஜவான்.
5. ஸ்ரீ K. சுப்பிரமணிய முதலியார்—கொட்டடி, திருமாலை, திருவிளக்கு.


ஸ்ரீ S. தண்டபாணி— மணியடித்தல்

ஸ்ரீ அருணாஜலம் பிள்ளை
,, சிங்காரம் பிள்ளை
,, வீராசாமி பிள்ளை
,, சின்னசாமி பிள்ளை
} கோவில் மேளக்காரர்கள்


ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்—திருஅலகு செய்தல்
ஆதிமூல மேஸ்திரி, ஏகாலி.




ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேனபிஷேக காட்சி.



ஸ்வாமி ரதாரோஹணத்திற்கு எழுந்தருளல்



ஸ்ரீ முத்தாம்பிகை.



ஸ்ரீ சிவசுப்ரமணியர்.

உ.

அன்பே சிவம்.

# முகவுரையும் - சமர்ப்பணமும்.

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.-(சேக்கிழார்)

## ரிஷிவந்தியம் ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேவஸ்தானம்.

இத்தலம் துவாபர யுகத்தில் தோன்றியதென்றும், பிறகு விஜய நகர மன்னர்களால் சக 1441 பிரமாதி தை பஞ்சமி திங்களில் இக்கோவில் புதுப்பிக்கப்பட்டதாகவும், கர்ண பரம்பரை செய்திகள் மூலமும், கல்வெட்டுக்களின் மூலமும், நாம் தெரிந்து கொள்ளமுடிகிறது.

இவ்வூர் திருவாளர்கள் . (1) S. **லக்ஷ்மண மூப்பர்,** (2) K. **குப்புசாமி பிள்ளை,** (3) R. P. **கந்தசாமி** (நான்) ஆகிய நாங்கள் மூவரும் அரசாங்க அறநிலைய பாதுகாப்பு ஆட்சி துரையினரால் 1) **ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர்,** 2) **ஸ்ரீ இராஜ நாராயணப்பெருமாள்** கோவில் ஆகிய இரு கோவில்களுக்கும் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டு 1961-ம் ஆண்டு மார்ச்மாதம் நான் நிர்வாக தர்மகர்த்தாவாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆனல், முன்னுள் தர்மகர்த்தா திம்மலை திருவாளர் **வேலாயுத உடையார்** அவர்களால் வழக்குத் தொடரப்பட்டு அதன்காரணமாக திருவாளர் S. **லக்ஷ்மண மூப்பர்** அவர்கள் தர்மகர்த்தா பதவியிலிருந்து அரசாங்கத்தாரால் நீக்கப்பட்டார். எனவே, நானும் திரு. K. **குப்புசாமி பிள்ளை**யும் தர்மகர்த்தாக்களாக பதவி ஏற்று அவற்றுள் நிர்வாக பொறுப்பினை நானே ஏற்று இறை பணிகளைச் செய்ய முன்வந்தேன்.

ஆனால், முன்னாள் தர்மகர்த்தா திம்மலை திருவாளர் A. வேலாயுத உடையார் அவர்கள் தேவஸ்தான ஆணையாளரின் உத்திரவுகளை புறக்கணித்து கோவில் நிர்வாகப் பொறுப்புக்கள், சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள், சொத்துக்கள் முதலானவைகளை எங்களிடம் ஒப்படைக்கவில்லை. எனவே, சர்க்கார் அனுமதியின்கீழ் அதிக பொருட்செலவுசெய்து வழக்குத்தொடர்ந்து முடிவில், சர்க்கார் மூலம் கோவில் நிர்வாகப் பொறுப்புமட்டும் 20-8-61-ல் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், கோவில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள், தஸ்தாவேஜுகள் முதலியவைகளை முன்னாள் தர்மகர்த்தா திருவாளர் A. வேலாயுத உடையார் அவர்களிடமிருந்தும், அவருடைய நண்பர்களிடமிருந்தும் பெறுவதற்கு ஆவன செய்துகொண்டிருக்கிறேம்.

இக்கோவிலுக்கு உள்ளூர், சுற்று வட்டாரப் பல கிராமங்கள், குறிப்பாக முன்னாள் தர்மகர்த்தா திம்மலை திருவாளர் A. வேலாயுத உடையார் அவர்களாலும், அவருடைய நண்பர்களாலும் (ரிஷிவந்தியம், அரியாங்கக்கை) கோயில் நிலங்களையும், சொத்துக்களையும் அனுபவித்துக்கொண்டு வரப்படுகிறது. இவ்வாறு பராதீனமாக்கப்பட்டு அனுபவித்து வரும் கோயில் சொத்துக்களையும் நிலங்களையும் ஒன்றுசேர்த்து கோயிலுக்கு உரிமையாக்கி அதன் வருமானங்களை கோயிலுக்கு பயன்படுத்தவும் **பிரம்மோற்சவம்** முதலிய **திருவிழாக்களை** சிறப்புற நன்முறையில் செய்யவும், பழுதுபட்டு ஆங்காங்கே சிலைகளாக இருக்கும் இரு கோயில்களையும், கோபுரங்களையும், சுற்றுப் பிரகாரங்கள், நடைபாதைகள், இருளடைந்துள்ள பகுதிகள் செப்பனிடவும், கோயிலுக்குச் சொந்தமான வாகனங்கள் அனைத்தும் உடைந்தும், உருக்குலைந்தும், பாழ்பட்டும் பயன்படுத்தமுடியாத நிலையில் இருக்கும் இவைகளை உடனடியாக சீர்படுத்தவும், இக்கோயிலைச் சேர்ந்த **தீர்த்த குளங்கள், மண்டபங்கள்** முதலியவைகளை சீர்படுத்தி செப்பனிட்டு ஆலயத்திற்கு பயன்படும் வகையில் செய்ய ஆவனசெய்துகொண்டிருக்கிறேன். (இவ்வாண்டு திருவிழாவைமுன்னிட்டு பொருட்செலவை பொருட்படுத்தாமல் மேற்படி வாகனங்கள் அனைத்தையும் பழுதுபார்த்து வர்ணம் தீட்டி உற்சவ காலங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது)

மேலும் இக்கோயில் தோன்றிய காலத்தில் **கும்பாபிஷேகம்** நடைபெற்றதென்றும், அதன்பின்னர் இதுவரையிலும் யாரும் கும்பாபிஷேகம் செய்யவில்லையென்றும் தெரிகிறது.

எனவே, இவ்விரு கோயில்களுக்கும் **திருப்பணி** செய்து மாபெரும் **கும்பாபிஷேக** புனித காரியத்தை சீருடனும் - சிறப்புடனும் நடத்திவைக்கவேண்டும் என்ற பேரார்வத்தினல் வேண்டிய ஆரம்ப வேலைகள் யாவும் செய்துகொண்டு வருகிறேன்.

காலஞ்சென்ற ரிஷிவந்தியம் நாவலர் **ஸ்ரீ ஜடாதர முதலியார்** அவர்கள் சுமார் 50 ஆண்டுகளுக்குமுன் இக்கோயிலின் வரலாறுகளை தமிழ் பாக்களின் மூலம் புனைந்து வெளியிட்டிருந்தார். அந்நூல் தற்போது கிடைப்பது அரிது.

ஆகவே, இக்கோயில் சிறப்பு நூலை பக்தகோடிகளும், பொதுமக்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நன்னோக்கத்தால் **ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் பிரம்மோற்சவம்** நடைபெற்று வரும் இந்நன்னாளில இக்கோயில் சிறப்பு நூலை தேவஸ்தான முதல் வெளியீடாக வெளியிட முன்வந்துள்ளேன்.

இக்கோயில் சிறப்பு நூல் வெளியிட ஆதரவும் அனுமதியும் வழங்கிய நமது தமிழக அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் உயர்திரு கனம் M. **பக்தவத்சலம்** அவர்களுக்கும், சென்னை, அறநிலைய பாதுகாப்பு ஆணையாளர் உயர்திரு K. **சாரங்கபாணி முதலியார்** அவர்களுக்கும், சென்னை உதவி ஆணையாளர் உயர் திரு. D. **ராமலிங்க ரெட்டியார்** அவர்களுக்கும், தென்னாற்காடு மாவட்ட உதவி துணை ஆணையாளர் உயர்திரு A.V. **நாகராஜன்** அவர்களுக்கும் விருத்தாசல வட்டம் தேவஸ்தான ஆய்வாளர் உயர்திரு R. R. **ரெட்டியார்** அவர்களுக்கும் தேவஸ்தான சார்பாக எங்களது மனமுவந்த நன்றியைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூல் வெளியிட எனக்கு உறுதுணையாக இருந்து உதவிபுரிந்த வேலூர் உயர்நிலைப்பள்ளி தமிழ்வித்துவான் திரு. **துரைதேவேந்திரன்** அவர்களுக்கும், இந்நூலில் அச்சிட்டிருக்கும் ஓவியங்கள், புகைப்படங்கள் முதலியவற்றை எழுதி தயாரித்துக் கொடுத்த சென்னை ஓவியர் திரு **K. R. சௌடையா** அவர்களுக்கும், இந்நூலின் ஆக்கத்திற்கு நற்கருத்துக்கள் வழங்கிய கேரளநாட்டைச்சேர்ந்த திரு. டாக்டர் **T. B. பணிக்கர்** அவர்களுக்கும், **அச்சிட்டு** உதவிய ரிஷிவந்தியம் **ஸ்ரீ தங்கம் அச்சகத்தி**னருக்கும், ஆக்கமும் ஊக்கமும் அளித்த பக்தகோடிகளுக்கும், உற்சவதாரர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூலை தொகுத்து வெளியிடும் பேற்றினை பெரும் தவப்பேறாக எண்ணி சுபகிருது ஆண்டு ஆனித்திங்கள் நான்காவது வாரம் **ஸ்ரீ முத்தாம்பிகா சமேத ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர்** பிரம்மோற்சவ வைபவ நன்னாளில் தேவஸ்தான (முதல்) வெளியீடாக அடியேன் இச்சிறப்புநாளில் ஸ்ரீ முத்தாம்பிகா சமேத ஸ்ரீ அர்த்தநாரீஸ்வர ஸ்வாமி பொற்பாத கமலங்களில் இச்சிறு நூலை சமர்ப்பிக்கிறேன்.

அன்பன்,

**Dr. R. P. கந்தசாமி,**

**மானேஜிங்-டைரக்டர்,**

1) ஸ்ரீ முருகன் டூடோரியல் இன்ஸ்டிடியூட்,
2) பாரதமாதா ஹிந்தி வித்யாலயம்,
3) ஸ்ரீ தங்கம் பவர் பிரஸ்,
4) ஸ்ரீ ஜெயகுமார் புக் டிப்போ,
5) முருகன் பிக்சர்ஸ்,

தலைமை அலுவலகம், ரிஷிவந்தியம்.

**கிளைகள் :- சென்னை சிலோன் மலேயா ஆப்ரிக்கா மாரிஷஸ்**

**நிர்வாக தர்மகர்த்தா**

**ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேவஸ்தானம்,**


**ரிஷிவந்தியம்.**

12-7-62.



**Dr. R. P. கந்தசாமி.**

நிர்வாக தர்மகர்த்தா.



திரு. K. குப்புசாமி பிள்ளை,

தர்மகர்த்தா.

## ஸ்தல இருப்பிடம்

இறைவன் திருவருள் ததும்பியது தமிழகம். இத் தமிழகத்தில் எண்ணற்ற புண்ணிய ஸ்தலங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றாக விளங்குவது **ரிஷிவந்தியம்**. இந்த **ஸ்தலம்**, தென்னார்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலுக்காவில்—திருக்கோவிலூருக்கும் கள்ளக்குறிச்சிக்கும் மத்தியில் 14-வது மைலில் பஸ் மார்க்கத்தில் உள்ளது.

## கோயில் தோன்றிய வரலாறு.

முற்கால மன்னர்கள் நாட்டிற்கு வேண்டிய நற்பணிகள் பலவற்றையும் செய்து, பெரும் புகழ் பெற்றிருந்தார்கள். அவர்களுள் விஜயநகர அரசர்கள் இக்கோயிலுக்கு திருப்பணிகள் புரிந்ததாக கர்ண பரம்பரை செய்தியாலும் கல்வெட்டுக் குறிப்புக்களாலும் அறிந்துகொள்ளமுடிகிறது.

## கோயில் மூர்த்திகள்

இக்கோயில் மூலஸ்தானத்தில் காட்சியளிக்கும **சுயம்புலிங்கமூர்த்திக்கு "ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர்"** என்று பெயர். **அம்மைக்கு "ஸ்ரீ முத்தாம்பிகை"** என்று பெயர். **செல்வ கணபதி, ஸ்ரீ சிவசுப்பிரமணியர், சைவ சமயக் குரவர் நால்வர், நந்தி யெம்பெருமான், நவக்கிரகங்கள்** முதலியன மூலமூர்த்திகளாகும். மாறும் தேவகோஷ்டங்களாக உள்ள சுவாமிகளின் விபரம், "நிர்த்த கணபதி, தெட்சிணாமூர்த்தி, அருணாசலேஸ்வரர், பிர்மா, விஷ்ணு, துர்க்கை." அம்மன் சன்னதிக்கு வடகிழக்கு மூலையில் நவக்கிரகமும், தென்கிழக்குப் பகுதியில் சண்டிகேஸ்வரரும் அமைந்து காட்சித் தருகின்றனர். அம்மன் கோயில் மேற்குப் பிரகாரத்தில் அகஸ்திய லிங்கம், விஸ்வநாதர், விசாலாக்ஷி, பிரம்மலிங்கம் ஆகிய சுவாமிகள் அமைந்துள்ளன. இப்பிரகாரத்தில் குறிப்பிடத்தக்க கல் சிலா சாசனம் கஜலக்ஷிமியோடு காணப்படுகிறது. இதில் உள்ள சாசனக்குறிப்பு என்னவென்றால் 'ரிஷிவந்தியம்' என்னும் ராஜநாராயணப் பட்டிணத்திற்கு வெளியூரிலிருந்துவரும் வாணிப பொருள்களுக்கும் - உள்ளூரிலிருந்து வெளியூர் செல்லும் வாணிபப் பொருள்களுக்கும் தரகு கொடுக்கவேண்டும். அந்தத் தரகு கோயிலைச் சார்ந்தது.

# தீர்த்தங்களும் - அதன் சிறப்புக்களும்:

இந்த ஸ்தலத்தில் விசேஷமாக கோயிலைச்சார்ந்த தீர்த்தங்கள் ஐந்து.

1. **அக்னி தீர்த்தம்** :— இந்த தீர்த்தக்குளம் கோயிலுக்கு தென்கிழக்கில் சுமார் ஒரு பர்லாங்கு தொலைவில், வயல்களுக்கு நடுவில் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் தொன்று தொட்டு இன்றுவரை பெண்கள் ஸ்நானம் செய்வதில்லை. அக்னி பகவானுக்கு ஏற்பட்ட சாபம் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இறைவனை வழிபட்டதால் நிவர்த்தியாயிற்று. இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து இறைவனை வணங்குபவர்களுக்கு முன்னுள் பாபங்கள் யாவும் நிவர்த்தியாகும்.

2. **சங்கர தீர்த்தம்** :- இத்தீர்த்தம் கோயிலுக்கு முன்புறம் கிழக்குதிசையில் சுமார் அரை பர்லாங்குதூரத்தில்அமைந்துள்ளது. இத்தீர்த்தம் இறைவனுல் உண்டாக்கப்பட்டதால் இதற்கு "சங்கர தீர்த்தம்" என்று பெயர் உண்டாயிற்று. இதில் ஸ்நானம் செய்து பயபக்தியுடன் இறைவனை வணங்கினுல் சகல இஷ்ட சித்திகளும் பூர்த்தியாகும்.

3. **அகஸ்திய தீர்த்தம்** :- இத்தீர்த்தம் கோயிலின் அண்மையில் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில்தான் அகஸ்தியர் ஸ்நானம் செய்து அர்த்தநாரீஸ்வரரை வணங்கி அருள்பெற்றதாகத் தெரிகிறது. அகஸ்தியர் ஸ்நானம் செய்ததால் இதற்கு "அகஸ்தியர்தீர்த்தம்" என்று பெயர் உண்டாயிற்று. பரமேஸ்வரன் அகஸ்தியருக்கு வாக்களித்தபடி பார்வதி பரமேஸ்வரன் திருமணக் கோலத்துடன் அகஸ்தியருக்கு இத்தலத்தில் திருமணக்கோல காட்சி கொடுத்தருளினுர். இந்தத் தீர்த்தத்தில் ஒரு மண்டலம் ஸ்நானம்செய்து ஆசாரத்துடனும், பயபக்தியுடனும இறைவனை வழிபாடு செய்பவர்களுக்கு புத்திரப்பேறு உண்டாகும். இத்தீர்த்தத்திற்கு வடபால் சிறு மண்டபம் ஒன்றில் " பெருநந்தி " ஒன்று இறைவன் சன்னதி நோக்கி அமைந்துள்ளது.

**4. இந்திர தீர்த்தம் :—** இத் தீர்த்தக்குளம் கோயிலுக்குப் பின்புறத்தில் அமைந்துள்ளது. இதில் இந்திரன் ஸ்நானம் செய்து பாவனை பூஜித்து அருள் பெற்றார். ஆகையால் இதற்கு "இந்திர தீர்த்தம்" என்று பெயர். இதில் 1 மண்டலம் ஸ்நானம் செய்து பயபக்தியுடன் இறைவனை வழிபட்டால் பல கர்ம வியாதிகளும், வைத்தியமும் சூரியனைக்கண்ட பனிபோல் நிவர்த்தியாகும்.

**5. ஞானபோத புஷ்கரணி தீர்த்தம் :—** இத்தீர்த்த குளம் 5000 வண்டி கற்களைக்கொண்டு கட்டப்பட்டதாலும், 5000 சதுரக் குழி பரப்பு இருப்பதினாலும், இதற்கு **ஐயாயிரம்** குளம் என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது. இத்தீர்த்தம் கோயிலுக்கு மேற்கில் சுமார் 1 பர்லாங்கு தூரத்திலுள்ளது. இத்தீர்த்தத்தில் ஸ்ரீராமபிரான் நீராடி எழுந்து கீழ்திசையை நோக்கும்போது லிங்கஜோதியைக் கண்டு ஞானம் பெற்றதால், இதற்கு 'ஞானபோத புஷ்கரணி' என்ற பெயர் உண்டாயிற்று. இதற்கு அறிகுறியாக குளத்தின் தென்கிழக்குப்பகுதியில் ரோடிற்கருகில் **ஸ்ரீ ராஜநாராயணப்பெருமாள்** கோயில் இன்றும் காணப்படுகிறது. அக்கோயிலிலும் திருமண வைபவங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. இப்பொழுதும் கோயிலில் திருமணம் செய்துகொள்ள வரும் மக்கள் இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து புத்தாடைகளைப் புனைந்து கோயிலுக்கு வந்து திருமணம் செய்து கொள்ளுகிறார்கள். இந்தத் தீர்த்தகரைக்கு வடபகுதியில் ஓர் மண்டபம் இருக்கிறது. இதற்கு "ஸ்ரீ தேவி மண்டபம்" என்று பெயர். பிரமோற்சவ காலங்களில் " தீர்த்தவாரி உற்சவம் " இம்மண்டபத்தில்தான் நடைபெறுகின்றது.

## ஸ்தல சிறப்புப் பெயர்கள்.

இந்த ஸ்தலத்திற்கு " ரிஷிவனம் என்றும், ரிஷிவந்த ஸ்தலம் என்றும், ராஜநாராயணப்பட்டிணம் " என்றும் பெயர் வழங்கப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறது. இந்த ஸ்தலம் ஒரு காலத்தில் வனமாக இருந்தது. இங்கு ரிஷிகள் பலர் தங்கி தவம் புரிந்த இடமாதலால் " ரிஷிவனம் " (இருடி.வனம்) என்றும், முனீஸ்வரர் இந்த ஸ்தலத்திற்கு வந்து (கோபுரத்தின் உள்பகுதியில் தென்பக்கத்தில் காணப்படும் முனீஸ்வரர்) தங்கி ஈசனை வழிபட்டதால் " ரிஷிவந்த ஸ்தலம் " என்ற பெயரும், ஸ்ரீ ராஜநாராயணப்பெருமாள் கோயில் அமைந்திருப்பதால் இதற்கு " ராஜநாராயணப்பட்டிணம் " என்றும் பெயர்கள் வழங்கலாயிற்று. மக்கள் தஞ்சாவூரை "தஞ்சை" என்றும், கோயம்புத்தூரை 'கோவை' என்றும் மருஉமொழியாக வழங்குவதைப் போல் ரிஷி வந்த இடமாகையால் இதை **ரிஷிவந்திய**மென்று வழங்கிவருகின்றனர்.

## கோவில் சிறப்பு.

இந்திரனும், மற்ற தேவர்களும் இங்குள்ள ஈஸ்வரனுக்கு தேன் அபிஷேகம் செய்தார்கள் அப்படிச் செய்யும்பொழுது சுயம்பு லிங்கத்தின் இடது பாகத்தில் அம்மன் திருஉருவக்காட்சி கிடைத்தது எனவே இவ்விறைவனுக்கு **அர்த்தநாரீஸ்வரர்** என்ற பெயர் ஏற்பட்டது. அர்த்தம் என்றால் பாதி என்பது பெயர், நாரீ என்பதற்கு பொருள் பெண் என்பதாகும், உமைக்கு ஈசன் தனது இடபாகத்தில் இடம் கொடுத்த வரலாறு இங்கு குறிப்பிடத்தக்கது.

## அபிஷேக சிறப்பு

இறைவனுக்கு செய்யப்படும் **தேன், பால், தயிர்** முதலிய அபிஷேகங்களுள் இங்கு எழுந்தருளியுள்ள **அர்த்தநாரீஸ்வருக்கு தேன் அபிஷேகம்** மிகச்சிறந்தது. இன்றும் **தேன் அபிஷேகம்** செய்தால் சுயம்புலிங்கத்தில் அம்மன் தரிசனம் கிடைக்கும். இது கலியுகத்தில் அற்புதமான **காட்சி.**

ஸ்ரீ ராமபிரானுக்கு ஞானத்தையும் அகஸ்திய முனிவருக்கு திருமணக்கோலத்தையும், பூஜை செய்த ரிஷிகளுக்கு நற்பலன் களையும், குகநமச்சிவாயருக்கு உணவு அளித்தும அருள் புரிந்தார். ஆகவே ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரரை தினந்தோறும நாம் தரிசித்து வந்தால், அகஸ்தியர், பிரம்மா, ஸ்ரீ ராமர், ஸ்ரீகுகநமச்சிவாயர் ஆகியவர்கள் அடைந்த பிறவிப்பயனை நாமும் அடையலாம் என்பது திண்ணம்,

## முருகனுக்கு லக்ஷார்ச்சனை

சுமார் 20-ஆண்டுகளுக்குமுன் பொது மக்களிடம் பணம் வசூல் செய்து **ஸ்ரீசுப்பிரமணியருக்குலக்ஷார்ச்சனை** செய்யப்பட்டது. தொடர்ந்த ஆண்டுகளில் வலம்புரி சங்குடன் 108-சங்கு அபிஷேகமும், 108 கலசாபிஷேகமும், திரு முருகனுக்கு வெள்ளி திருமுடியும,வெள்ளிவேலும் செய்து வைக்கப்பட்டது. மேற்படி விசேஷ வைபவங்களை சிறப்புற நடத்த முன் வந்த திருவாளர்கள், 1. டாக்டர் T B. பணிக்கர், 2. C. நாராயணசாமி செட்டியார், 3. N. D. வெங்கட்ராமய்யர், ஆசிரியர். 4. A. ராமநாத அய்யர், ஆசிரியர், 5 S. கணபதியா பிள்ளை, (முன்னாள் தர்மகர்த்தா) வெங்கலம். 6. ஸ்ரீ S. அனந்தசுப்பராய அய்யர், புரோகிதர், ஆகியவர்களும் சேர்ந்து நடத்தி வைத்தனர்.

1957-ம் ஆண்டு பார்த்திப வருஷம் ஐப்பசி மாதத்திலும் ஹேவிளம்பி வருஷம ஐப்பசி மாதத்திலும் இக்கோவிலிலுள்ள ஸ்ரீ திருமுருகப்பெருமானுக்கு இவ்வூர் டாக்டர் R.P.**கந்தசாமி** (ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட் & பாரதமாதா ஹிந்தி வித்யாலய ஸ்தாபகரும்) ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் தேவஸ்தான நிர்வாக தர்மகர்த்தா அவர்கள பெரும் பொருட் செலவில் நக்கீரர் மொழிந்த வாக்குப்படி **லட்சார்ச்சனை** வைபவங்களைச் சிறப்புற நடத்தி, லட்சார்ச்சனை செய்ததின் ஞாபகார்த்தமாக திருமுருகாற்றுப்படை என்ற நூலை அச்சிட்டு இறைவழிபாடு செய்யும் அன்பர்கள் பலரும் உய்யும் வண்ணம் இலவசமாக வழங்கினார் கடந்த 15-ஆண்டுகளாக பிரம்மோற்சவ காலங்களில் ரதஉற்சவத்தன்று விசேஷ முதல் மண்டகப்படி ஆராதனைகளும் ஆண்டுதோறும் சித்திரை மாதம் அக்கினி நட்சத்திர காலத்தில் **சிவபிரானுக்கு** சீதள கும்ப ஆராதனை உற்சவங்களும், மாதந்தோறும இருமுறை வரும் பிரதோஷகட்டளைகளும் செய்து வருகிறார்.

1962-ம் வருஷம் ஜனவரி மாதம் அஷ்டக் கிரகயோக தோஷ நிவாரணத்தை முன்னிட்டு ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரருக்கு விசேஷ முறையில் அபிஷேக ஆராதனையும் லட்சார்ச்சனையும் நடைபெற்றது. இதை முன்னின்று நடத்தியவர்கள் பின் வருமாறு, 1) ஸ்ரீ R.C.ஜெயராம அய்யர், ஆசிரியர், 2) ஸ்ரீ S. தண்டபாணி அய்யர், ஆசிரியர், 3) ஸ்ரீ V. பெரியசாமி அய்யர், தலைமை ஆசிரியர்.

ஸ்ரீனிவாச அய்யங்கார், மனோஹர் சற்பூர தொழிற்சாலை டாக்டர் R. P. கந்தசாமி, ஸ்ரீ கந்தவிலாஸ் மற்றுமுள்ள பக்த கோடிகள்

## திருவிழாக்கள்,

ஆண்டுதோறும் பலவிழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானவை பிரம்மோற்சவம் ஆகும். இந்த பிரம்மோற்சவம் ஒவ்வொரு ஆண்டும் ஆனி-மாதத்தில் சுக்லபட்சம் மக நக்ஷத்திரத்தில் துவஜாரோசணம் நடத்தி, கேட்டை நக்ஷத்திரத்தில் **ரத உற்சவம்** மிக விமரிசையாக கொண்டாடப்படுகின்றன. முதல் நாள் விக்னேஸ்வர பூஜையுடன் விழா துவங்குகிறது. விழா 10 நாட்கள் நடைபெறுகிறது

இந்த காலங்களில் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து விழாவில் கலந்து இறைவனை தரிசித்து செல்லுகின்றனர். உற்சவ காலங்களில் ஏராளமான கடைகள் தெருக்களின் இருபுறங்களிலும் காணப்படுகின்றன. 10-நாட்களும் பலவித வாகனங்களில் ஸ்வாமி ஊர்வலம் வரும். அக்காலங்களில் மின் விளக்கு அலங்காரமும் வாணவேடிக்கை, பாண்டு, மேளம், இன்னிசை கச்சேரிகள் சமய சொற்பொழிவு முதலானவைகள் நடைபெறும்.

## சோமவார அமாவாசை சிறப்பு

திருமணத்தம்பதிகளும் புத்திரபேறு இல்லாத தம்பதிகளும் ஞானபோத புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அங்குள்ள அரசமரத்தை சுற்றி கோயிலுக்கு வந்து இறைவனை அர்ச்சனை செய்து வணங்கினால் புத்திரச் செல்வத்துடன் பாக்கியங்களையும் பெற்று வாழ்வில் இன்பம் அடைவது நிச்சயம். இந்த ஸ்தலத்தின் பெருமையை தெரிந்த அநேக மைல்களுக்கு அப்பால் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னும் சோமவார அமாவாசையில் இங்கு வந்து ஸ்வாமிதரிசனம் செய்து பெரும்பேறு பெற்று செல்லுகின்றனர்.

## நாகதரிசன காட்சி,

1961-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ முத்தாம்பிகை அம்மாள் கழுத்தைச்சுற்றி நாகசர்ப்பம் ஒன்று படம் எடுத்து ஆடி பக்தர்களுக்கு தெய்வீககாட்சி அளித்தது. முற்காலங்களிலும் விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குமுன்னால் இத்தகைய தெய்வீக தரிசனம் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

## ஸ்தலவிருக்ஷம்

ஒவ்வொரு ஸ்தலத்திற்கும் மூர்த்தி அமைந்திருப்பது போல, விருக்ஷமும் அமைந்திருக்கிறது. மதுரை ஆலவாய் அப்பருக்கு கடம்ப விருக்ஷமும், ஜம்பை ஜம்புகேஸ்வரருக்கு பவள விருக்ஷமும் அமைந்திருப்பதுபோல இக்கோவிலுக்கு புன்னைமரம ஸ்தலவிருக்ஷமாக அமைந்திருக்கிறது. இவ்விருக்ஷம் கோயிலின் உள்பக்கத்தில் கோபுரத்தை சேர்ந்தார்போல் வட திசையில் காணப்படுகிறது.

## குகநமச்சிவாயர் வருகை

குருநமச்சிவாயரின் சீடரான குகநமச்சிவாயர் திருவண்ணாமலையிலிருந்து பலஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு இவ்வூர் வழியாக சிதம்பரத்திற்கு செல்லும்போது பசி அதிகமாகி ஸ்ரீ முத்தாம்பிகை அம்மையிடம் சென்று "தாயிருக்க பிள்ளை—சோறு கொண்டுவா" என்ற செய்யுளை பாடினார். ஸ்ரீ அம்மையார் அவர் முன் தோன்றி 'நான் இங்குஇறைவனுடன் அர்த்தபாகம் பெற்றிருக்கிறேன் எனவே இருவரையும் சேர்த்து பாடுவாயாக" என்று கூற குகநமச்சிவாயரும் அதன்படியே 'மின்னும்படி வந்த சோறு கொண்டுவா' என்ற செய்யுளை பாடினார். உடனே அம்மையார் பொற்கிண்ணத்தில் உணவு அளித்து அவரின் பசிப் பிணி போக்கினார்.

### பாடல்கள்.

(1) தாயிருக்க பிள்ளை தளருமோ தாரணியில்?
நீயிருக்க நான்தளர நீதியோ ?
வேயுரு தோளிபங்கன் விண்ணோர்கள் போற்றும்
திரு முத்து வாளியே—சோறு கொண்டுவா.

(2) மின்னும் படிவந்த மேகலத் தீசருடன்
பொன்னின் கலையாளே
... ... .... .... ...
மலையாளே ! சோறு கொண்டுவா.

## ஊர் சிறப்பு.

இவ்வூர் இயற்கை காட்சிகள் நிறைந்த இடமாகும். சுற்றுப்புறங்களில் சிறு சிறு மலைகளும் செந்நெல் விளையும் நிலங்களும் சூழ்ந்துள்ளன. இவ்வூரில் சுமார் 1000 வீடுகளும், 4000 மக்களும் வசிக்கின்றனர். நாகரீக வளர்ச்சிக்கேற்ப மின் விளக்குகளும், தேரோடும் திருவீதிகள் அகலமாக அமைந்துள்ளன. மேலும் இவ்வூரில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகமும், விவசாய அலுவலகம், ஊராட்சிமன்றம், தபால் நிலையமும், காவலர் நிலையமும்

மருத்துவ மனைகள், மூன்று பள்ளிக்கூடங்களும் உள்ளன. குடிநீர் குளம், குடிநீர் குழாய்கள் ஆகியவைகளும், தானியம் அரைக்கும் அரவைமில்கள் இரண்டும், மாரியம்மன் கோவிலும், சங்கையம்மன் முதலான கிராம தேவதைகளும் உள்ளன. இவ்வூரில் ஞாயிற்றுகிழமைதோறும் வாரச்சந்தை கூடி ஊரை சிறப்புறச் செய்கிறது. இவையே அன்றி மேலும் சிறப்பாக இவ்வூரில் அமைந்துள்ளது யாதெனில், நம்நாடே அன்றிபிறநாடும் பாராட்டும் வகையில் தென் ஆப்ரிக்கா, சிலோன், மலேயா முதலிய கடல் கடந்த இடங்களில் முதன்மை பெயர்பெற்று அஞ்சல் மூலமாகவும் நேர்முகமாகவும் மாணவர், மாணவிகளுக்கு கல்வி அறிவைபுகட்டி நல்வாழ்வுக்கு வழிகாட்டியாகவிளங்கும் ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட், & பாரதமாதா ஹிந்தி வித்தியாலயம், ஸ்ரீ தங்கம் பிரஸ், ஆகிய கல்வி ஸ்தாபனங்கள் அமைந்துள்ளன.

தற்போது இக்கோயில் மின்சார விளக்குகளுடன் காட்சியளிக்கின்றது. அமைச்சர்கள், அறநிலைய பாதுகாப்பு உதவி ஆணையாளர், துணை ஆணையாளர், ஆய்வாளர், புலவர்கள், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், பக்தகோடிகள் இக்கோயிலுக்கு வருகை தந்து இறைவனை வணங்கி இன்பப்பேறு பெற்றுள்ளார்கள்.

# முன்னாள் நிர்வாகம்

1. முன்னாள் தர்மகர்த்தா திம்மலை திரு. **பழனிமுத்து உடையார்** அவர்களின் நிர்வாக காலங்களில் தேவஸ்தான வருவாயிலிருந்து கோயிலுக்கணமையில் சன்னதி வீதியில் சத்திரமொன்று கட்டப்பட்ட விவரம் கோயில் பழைய ரிக்கார்டுகள் மூலம் தெரியவருகிறது.

2. அவருக்கடுத்த தர்மகர்த்தா பிளமேடு திரு. சொக்கலிங்க உடையார் அவர்கள் நிர்வாகத்தில விசேஷ நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

3. அடுத்து பூண்டி கம்பத்தம் ஸ்ரீ பரமானந்த நாயனர் தர்மகர்த்தாவாக இருந்த அந்நாட்களில் பெரும் பொருட்செலவில் பல இன்னல்களுக்கிடையே இரும்பு அச்சு பொருத்தப்பட்ட மர புதுத்தேர் ஒன்று கோயிலுக்கென அமைத்துத் தந்துள்ளதுடன், அவரது மனைவியார் தமது சொந்த பொருட்செலவில் கோயிலுக்கு முன்புள்ள அகஸ்தியர் தீர்த்தத்தை கல்படி வைத்து திருக்குளமாக உருவாக்கித் தந்ததுடன் ரதஉற்சவத்திற்கு பயன்படும் வகையில் தேர்ச்சீலையும் தைத்து தந்து உதவியதாகத் தெரிகிறது.

4. அடுத்து கோயில் நிர்வாகப் பொறுப்பினை ஏற்ற வெங்கலம் நிலக்கிழார் ஸ்ரீ S. **கணபதியாப்பிள்ளை** அவர்கள், ஸ்ரீ சிவ சுப்ரமணிய ஸ்வாமிக்கு அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்புடன் பக்தகோடிகள் பேராதரவைக்கொண்டு நடத்தியுள்ளார்.

5. அடுத்து திம்மலை மணியம் திரு. **A. வேலாயுத உடையார்** அவர்கள் கடந்த ஏழாண்டுகளுக்கு முன்னிருந்து 19—8—61 வரை தர்மகர்த்தாவாக இக்கோயிலுக்கு பணியாற்றியுள்ளார்.

கோபுரமுன் மண்டபம் பிரித்து சீர்படுத்தி செப்பனிட்டு அதன் முன்புறம் **ஸ்ரீ** வேலாயுத உடையார் **தர்மம்** என்று கல்லில் பொறித்துள்ளார். ஆனால் இம்மண்டபத்திருப்பணி செலவுகள் கோவிலின் வருவாயிலிருந்து செய்ததாக கோயில் **கணக்குகள்** காட்டுகின்றன.

இக்கோயில் வருமானத்திலிருந்து கோயிலுக்கான மின் விளக்குகள் கடந்த 3 ஆண்டுகளுக்குமுன் பொருத்தப்பட்டது. இது தேவஸ்தானத்துக்கு அவர் செய்த முக்கிய நற்பணியென்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் தர்மகர்த்தா திரு. S. கணபதியாப்பிள்ளையிடமிருந்து கோயிலுக்கு சேரவேண்டிய தொகைகளை வசூலிக்கும் வகையில் அவர் குமாரர் திரு. **திருஞானசம்பந்தபிள்ளை** யிடமிருந்து சில நிலங்கள் கோயிலுக்காக கிரயம் எழுதி வாங்கிக் கொண்டார். இது இக்கோயிலுக்குசேரவேண்டிய சொத்துக்களை சேர்க்கும் நற்பணிகளில் ஒன்றென்பது மறக்கற் பாலதன்று ஆனால் இவரது ஊரில் (திம்மலையில்) இக்கோயிலுக்கு சொந்தமாக இருந்துவரும் சுமார் **20 ஏக்கர் நஞ்சை, புஞ்சை** நிலங்களின் வருவாய்களை கோயிலுக்குக் கொடுக்காமலிருந்து வருகிறார்

ரிஷிவந்தியம் மதுரா அரியாந்தக்கை என்ற கிராமத்தில் இக்கோயிலுக்குச் **சொந்தமான** நஞ்சை, புஞ்சை, வீடு முதலிய சொத்துக்களை இவர் **மாற்றாருக்கு விற்பனை** செய்துள்ளார். அத்துடன் இவ்வூரில் கோயிலுக்குச் சொந்தமான சுமார் **5** ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களை ரிஷிவந்தியம் ஊராட்சி மன்றத்தலைவர் திருவாளர் V. **அண்ணாமலை மூப்பர்** அவர்களின் தமையனாரும் உள்ளூர் பெரும் நிலக்கிழாருமான திருவாளர் **V. ஆறுமுக மூப்பர்** அவர்களுக்கு **1961**-ம் ஆண்டு ஜூலை மீ ரூ. 2500-க்கு **அடமானம்** எழுதிக் கொடுத்துள்ளார்.

# புது நிர்வாகம்.

**20—8—61**-ல் இக்கோயில் நிர்வாகப்பொறுப்பினை சர்க்கார்மூலம் நானும் (Dr. R. P. **கந்தசாமி,**) திரு. K. **குப்புசாமி பிள்ளை** அவர்களும் ஏற்றுக்கொண்டோம்.

1) இதற்குமுன் கோயிலுக்கு சொந்தமான நிலங்கள், சொத்துக்கள், வாடகைகள், தழைவிற்பனை, அர்ச்சனை தொகைகள், திருமண வருவாய்கள் முதலிய நேரடியாகக் கிடைக்கக்கூடிய வருமானங்களுக்கு அச்சிட்ட ரசீது கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தற்சமயம் **20—8—61** முதல் எங்கள் நிர்வாகத்திற்குவந்தபின் அறநிலையசட்டபடி மேற்கண்ட வருமானங்களுக்கும் இன்ன பிற எல்லாவித வருமானங்களுக்கும் அச்சிட்ட ரசீது வழங்கப்பட்டு கோயில் வரவு செலவு கணக்குகளில் அவ்வருமானங்கள் முறைப்படி சேர்க்கப்பட்டு வருகின்றன.

2) கோயில் நிலங்கள் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு விட்டு அதன் நியாயமான வருவாய்கள் கோயிலுக்கு கிடைக்குமாறு செய்து வருகிறோம்.

முன்னாள் தர்மகர்த்தாவால் **பராதீனம்** செய்யப்பட்ட சொத்துக்களை திரும்ப கைப்பற்ற ஆவனசெய்துகொண்டு இருக்கிறோம்.

4) பல ஆண்டுகளாக நடத்தத் தவறியிருந்த ஆற்றுத் திருவிழா, மாட்டுப்பொங்கல் திருவிழா, நவராத்ரி உற்சவம் மற்றும் பல திருவிழாக்கள் இவ்வாண்டுமுதல் சிறப்பாக உபயதாரர்களின் ஒத்துழைப்பின் பேரில் நடத்தி வருகிறோம்.

5) சிதைவுற்றிருந்த கோயில் சகடையை புதுப்பித்தும், பழுதுபட்டு பயனற்றமுறையில் சீர்படுத்தப்படாமலிருந்த கோயில் வாகனங்கள் யாவும புதுப்பித்து வர்ணம் தீட்டி இவ்வாண்டு திருவிழாவிற்கு பயன்படுத்தி வருகிறோம்.

6) கோயில் தினசரி பூஜை நிகழ்ச்சிகளுக்கு காலவரை நிர்ணயித்து தேவையான சிப்பந்திகளை நியமித்து, குறித்தகாலம் தவறாமல் பூஜை முதலியன நடந்துவர நியதிகளும் வகுத்து அதன்படி நடந்து வருகிறதென்பதையும் பக்த கோடிகளுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துககொள்ள விரும்புகிறேன்.

7) திருப்பணி துவக்க விழா விரைவில் நடத்த ஆவன செய்து வருகின்றோம். யாவும் இனிது முடிய எல்லாம் வல்ல இறைவன் திருவடியை இறைஞ்சுகின்றோம்.

**(சுபம்)**

# ஸ்தோத்திரப் பாடல்கள்.

1. பாதி பெண்ணுருப் பாதியாணுருவெனப் பரந்த
வேதின் முச்சகம் பூசை செய்வானவை யிரண்டும்
ஓதிலோர் வடிவாகிய விலிங்கமா யொளிரும்
தீ திலர்த்தனுரீ சுர தேவனே சரணம்.

- நாவலர். ஜடாதர முதலியார் -

விநாயகர் தோத்திரம் :-

2. முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையுள் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

சிவபெருமான் தோத்திரம் :-

3. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே,

- அப்பர் சுவாமிகள் -

முருகன் தோத்திரம் :-

4. ஏறுமயில் ... ஏறுமுகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி

- அருணகிரிநாதர் -

அம்மன் தோத்திரம் :-

கலைபயின்ற வுளத்தினிக்குங் கரும்பினைமுக்
கனியையருட் கடலை யோங்கு
நிலை பயின்ற முனிவரருந் தொழுதேத்த
நான்முகனுர் நீண்ட நாவிற்
தலைபயின்ற மறைபயின்ற மூவுலகுஞ்
சாக்கின்ற தாயை வாதைச்
சிலை பயின்ற நுதலாளைக் கலைவாணி
யம்மையை நாம் சிந்திப்போமே.

- இராமலிங்க அடிகள் -

---

ஸ்ரீ தங்கம் பவர் பிரஸ், ரிஷிவந்தியம்.

# வேண்டுகோள்!

தேவஸ்தானத்தில் திருமணம், அர்ச்சனை, அபிஷேகம், தீபாராதனை, பிரார்த்தனை ஆகியவைகளுக்குரிய கட்டணங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தில் ரசீது பெற்றுக் கொள்ள சேவார்த்திகளை வேண்டப்படுகின்றது,

தேவஸ்தான

**நிர்வாக அலுவலர்.**